**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.03/2025 in O.S.72/2025**

ரெங்கநாதன் (எ) அரங்கநாதன் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. செல்வி,
2. மலையரசன்,
3. மஞ்சள் மலர்,
4. பிரியங்கா,
5. சௌமியா. ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 23.07.2026 தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. இள. சிவராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது மனு சொத்தில் மனுதாரர் / வாதியின் நிம்மதியான அனுபவத்தில் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, அவரது ஏஜெண்டுகளோ மனு சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக அபகரித்து வேறு 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துவிடுவார்கள் என்பதால் வருமுன் காப்பதற்காக தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவர் கீழ் உரிமை கொண்டாடுபவர்களோ எவ்வித இடையூறும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்க இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி சிபிசி ஆர்டர் 39 ரூல் 1 & 2 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரரும், கோவிந்தசாமி (லேட்) மற்றும் இரவிச்சந்திரன் (லேட்) இவர்கள் இறப்பதற்கு முன்பு தங்கள் குடும்பத்தோடு கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றும், அப்போது அவர்களுக்குள் சொதது சம்மந்தமாக எந்தவிதமான பூசலும் ஏற்பட்டதில்லை என்றும், அதன்படி தாவா I மற்றும் II அயிட்ட சொத்தை பொறுத்த அளவில் கடந்த 24.07.2005ம்

தேதி மனுதாரரும், இறந்துபோன அண்ணன் கோவிந்தசாமியும் தாவா சொத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்படாத ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி அதன் மூலம் இருவரும் சொத்துக்களை சப்டிவிஷன் செய்து கொள்ளாமல் அவரவர்கள் தங்களின் பாகப்படி தனிதனியாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றும், மனுதாரரின் தந்தை சிவசாமிக்கு மேற்கண்ட அப்பாவு தந்தையாவார், மனுதாரருக்கு கோவிந்தசாமி உடன்பிறந்த அண்ணன் ஆவார், மேற்படி கோவிந்தசாமி கடந்த 21.10.2011ம் தேதி இறந்துவிட்டார் என்றும், இரவிச்சந்திரன் மனுதாரரது உடன்பிறந்த அண்ணன் கோவிந்தசாமியின் மகன் ஆவார், மேற்படி இரவிச்சந்திரன் கடந்த 13.11.2013ம் தேதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி கோவிந்தசாமியும், ரவிச்சந்திரனும் இறந்துவிட்டதால் ரவிசந்திரனின் வாரிசுகளை எதிர்மனுதாரர்களாக இவ்வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தில் கண்ட அ.பு.ச.எண்கள் 10/4, 10/5A, 11/2 ல் கண்ட நிலங்களையும் மனுதாரர் 24.07.2003ம் தேதி மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர்களின் மாமனார் மற்றும் 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவான இறந்துபோன கோவிந்தசாமி பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பாகமும் அமுலுக்கு வந்து அதன்படி மனுதாரர் தாவா சொத்து விவரத்தில் கண்ட சொத்தினை ஆண்டு அனுபவித்து வருகின்றார் என்றும், இதில் வேறு எவருக்கும் எவ்வித உரிமையோ அனுபவமோ கிடையாது என்றும், மனுதாரருக்கும், 1ம் பிரதிவாதியின் மாமனாரும், 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவுமான இறந்துபோன கோவிந்தசாமிக்கும் 27.04.2025ம் தேதி பாக பாத்திய விடுதலை பத்திரம் வழியாக கிடைத்த படி மனுதாரர் தனது பாகத்தினை அனுபவித்து வந்ததாலும், மனுதாரரும் எதிர்மனுதாரர்களும் தங்களுக்குரிய சொத்தினை சப்டிவிஷன் செய்து கொள்ளாமல் நாளது தேதிவரையில் ஆண்டு அனுபவித்து வருகின்றார்கள் என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் கூட்டுப்பட்டாவாக இருக்கும் தாவா சொத்திற்கு சப்டிவிஷன் செய்து கொள்ள மனுதாரர் எதிர்மனுதாரர்களை பலமுறை கேட்டு வந்தும், அதற்கு எதிர்மனுதாரர்கள் தங்களுக்கே தெரிந்த காரணங்களை சொல்லி காலம் கடத்தி வந்தார்கள் என்றும், இவ்வாறான நிலையில் மனுதாரர் இறுதியாக எதிர்மனுதாரர்களிடம் கடந்த 14.03.2025ம் தேதி தாவா சொத்துக்களை சப்டிவிஷன் செய்து கொடுக்க கேட்ட போது சப்டிவிஷன் செய்ய ஒத்துழைப்பு கொடுக்க முடியாது, தாவா சொத்து இப்போது சப்–டிவிஷன் செய்து கொண்டால் தனக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு

குறைவாக இருக்கும், அதனால் சப்–டிவிஷன் செய்ய ஒத்துழைப்பு கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டதுடன் மேற்படி 14.03.2025ம் தேதியில் தாவா சொத்துக்களில் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தங்களது ஆட்களுடன் அத்துமீறி நுழைய முற்பட்டதை மனுதாரர் பெரும் சிரமத்துடன் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், இருந்தும் 1 முதல் 5 எதிர்மனுதாரர்க்ள தாவா சொத்துக்களுக்கு தங்கள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டாவினை கொண்டு தாவா சொத்தை முன்றாம் நபர்களுக்கு வில்லங்கப்படுத்த தொடர்ந்து முயன்று வருகிறார்கள் என்றும், ஆகையால் மனு சொத்தில் மனுதாரர் / வாதியின் நிம்மதியான அனுபவத்தில் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, அவரது ஏஜெண்டுகளோ மனு சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக அபகரித்து வேறு 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துவிடுவார்கள் என்பதால் வருமுன் காப்பதற்காக தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவர் கீழ் உரிமை கொண்டாடுபவர்களோ எவ்வித இடையூறும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்க மனு விசாரணை முடியும் வரை இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்று மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதனை 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:</u>

3. மனுதாரரின் மனு பொய்யானது என்றும், மனுதாரரே O.S.No.72/2023 வழக்கில் பாகம் கேட்டுவிட்டு வழக்கில் பாக விடுதலை என்ற வார்த்தை சொல்லாமல் மேசடி எண்ணத்தில் தாவாவில் பாக விடுதலை பத்திரம் பாத்தியம் கேட்டு தாவா தொடர்ந்துள்ள தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், சட்டப்படி மனுதாரருக்கு எந்த உரிமையும் கிடைக்காது என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களின் குடும்ப சொத்துக்கள் பொறுத்து கடந்த 15.07.2001ம் தேதியில் ஒரு குடும்ப ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டு அதன்படி தனித்தனி அனுபவமும், தனித்தனி ஆவண மாற்றமும் ஏற்பட்டு குடும்ப ஏற்பாடு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றும், குடும்ப ஏற்பாட்டின்படி தனித்தனி அனுபவத்தை நன்கு அறிந்த மனுதாரர் ஏற்கனவே பாகம் கோரி O.S.No.72/2023 வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், தாவா வழக்கிற்கும் ஏற்கனவே உள்ள பாக வழக்கிற்கும் O.S.No.72/2023 முன்பே மனுதாரரின் மகன் பாதை பாத்தியம் கோரி O.S.No.253/2022 என்று தனியே வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், O.S.No.253/2022 வழக்கில் ஏற்கனவே ஏற்பட்ட 15.07.2001ம் தேதிய பாக பத்திரப்படி மனுதாரரின் மகன்

அழகுமரநாதன் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களிடம் இருந்து பெற்ற கிரைய ஆவணத்திலும் 15 அடி என்று காட்டப்பட்ட பாதை பாத்தியத்தை 25 அடி பாதை கேட்டு தொடர்ந்த வழக்குக்கு ஆதரவாக ஆவணங்களை ரத்து செய்யவும் கிரைய பத்திரங்களை ரத்து செய்யவும் தற்பொழுது புதியதாக பாக விடுதலை பத்திரம் என்று வீண் விவகார நோக்கில் தொடர்ந்துள்ள தாவா நிலைக்காது என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**பிரச்சனைக்கான தீர்வு:**

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. இம்மனுவின் மனுதாரர்/வாதியும், கோவிந்தசாமி (லேட்) மற்றும் இரவிச்சந்திரன் (லேட்) இவர்கள் இறப்பதற்கு முன்பு தங்கள் குடும்பத்தோடு கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றும், அப்போது அவர்களுக்குள் சொத்து சம்மந்தமாக எந்தவிதமான பூசலும் ஏற்பட்டதில்லை என்றும், அதன்படி தாவா I மற்றும் II அயிட்ட சொத்தை பொறுத்த அளவில் கடந்த 24.07.2005ம் தேதி மனுதாரரும், இறந்துபோன அண்ணன் கோவிந்தசாமியும் தாவா சொத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்படாத ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி அதன் மூலம் இருவரும் சொத்துக்களை சப்டிவிஷன் செய்து கொள்ளாமல் அவரவர்கள் தங்களின் பாகப்படி தனிதனியாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றும், மனுதாரரின் தந்தை சிவசாமிக்கு மேற்கண்ட அப்பாவு தந்தையாவார், மனுதாரருக்கு கோவிந்தசாமி உடன்பிறந்த அண்ணன் ஆவார், மேற்படி கோவிந்தசாமி கடந்த 21.10.2011ம் தேதி இறந்துவிட்டார் என்றும், இரவிச்சந்திரன் மனுதாரரது உடன்பிறந்த அண்ணன் கோவிந்தசாமியின் மகன் ஆவார், மேற்படி இரவிச்சந்திரன் கடந்த 13.11.2013ம் தேதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி கோவிந்தசாமியும், ரவிச்சந்திரனும் இறந்துவிட்டதால் ரவிசந்திரனின் வாரிசுகளை எதிர்மனுதாரர்களாக இவ்வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தில் கண்ட அ.பு.ச.எண்கள் 10/4, 10/5A, 11/2 ல்

கண்ட நிலங்களையும் மனுதாரர் 24.07.2003ம் தேதி மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர்களின் மாமனார் மற்றும் 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவான இறந்துபோன கோவிந்தசாமி பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பாகமும் அமுலுக்கு வந்து அதன்படி மனுதாரர் தாவா சொத்து விவரத்தில் கண்ட சொத்தினை ஆண்டு அனுபவித்து வருகின்றார் என்றும், இதில் வேறு எவருக்கும் எவ்வித உரிமையோ அனுபவமோ கிடையாது என்றும், மனுதாரருக்கும், 1ம் பிரதிவாதியின் மாமனாரும், 2, 3, 4, 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவுமான இறந்துபோன கோவிந்தசாமிக்கும் 27.04.2025ம் தேதி பாக பாத்திய விடுதலை பத்திரம் வழியாக கிடைத்த படி மனுதாரர் தனது பாகத்தினை அனுபவித்து வந்ததாலும், மனுதாரரும் எதிர்மனுதாரர்களும் தங்களுக்குரிய சொத்தினை சப்டிவிஷன் செய்து கொள்ளாமல் நாளது தேதிவரையில் ஆண்டு அனுபவித்து வருகின்றார்கள் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. அதனை மறுத்து மனுதாரர் எதிர்மனுதாரர்களின் குடும்ப சொத்துக்கள் பொறுத்து கடந்த 15.07.2001ம் தேதியில் ஒரு குடும்ப ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டு அதன்படி தனித்தனி அனுபவமும், தனித்தனி ஆவண மாற்றமும் ஏற்பட்டு குடும்ப ஏற்பாடு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றும், குடும்ப ஏற்பாட்டின்படி தனித்தனி அனுபவத்தை நன்கு அறிந்த மனுதாரர் ஏற்கனவே பாகம் கோரி O.S.No.72/2023 வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், தாவா வழக்கிற்கும் ஏற்கனவே உள்ள பாக வழக்கிற்கும் O.S.No.72/2023 முன்பே மனுதாரரின் மகன் பாதை பாத்தியம் கோரி O.S.No.253/2022 என்று தனியே வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், O.S.No.253/2022 வழக்கில் ஏற்கனவே ஏற்பட்ட 15.07.2001ம் தேதிய பாக பத்திரப்படி மனுதாரரின் மகன் அழகுமரநாதன் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களிடம் இருந்து பெற்ற கிரைய ஆவணத்திலும் 15 அடி என்று காட்டப்பட்ட பாதை பாத்தியத்தை 25 அடி பாதை கேட்டு தொடர்ந்த வழக்குக்கு ஆதரவாக ஆவணங்களை ரத்து செய்யவும் கிரைய பத்திரங்களை ரத்து செய்யவும் தற்பொழுது புதியதாக பாக விடுதலை பத்திரம் என்று வீண் விவகார நோக்கில் தொடர்ந்துள்ள தாவா நிலைக்காது என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கானது மனு சொத்து / தாவா சொத்து மனுதாரருக்கு உரிமையானது என்று விளம்புகை செய்ய வேண்டியும், தொடர் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்துள்ள நிலையில் இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவின் சங்கதிகளை மெய்பிக்கும் விதமாக யாதொரு சாட்சிய சான்றாவணமும் மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்படவில்லை.

10. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டுள்ளது. மனு அபிடவிட் எதிர் வழக்குரை ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவில் எந்தவித வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை, ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டு விசாரிக்கப் படவில்லை, வாய்மொழி சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தால்தான் மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு சாட்சியங்கள் ஏதும் முன்னிறுத்தாததாலும், ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படாததாலும் இம்மனுவை அனுமதிக்கத்தக்க போதிய முகாந்திரம் இல்லை என்றும், முதல் தோற்ற வழக்கும் சமச்சீர் நிலையும் மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்றும், எவ்வகையில் தனக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் மனுதாரர் தரப்பில் மெய்ப்பிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு எந்த சாட்சியங்களும், ஆவணங்களும் குறியீடு செய்யப்படாததால் இம்மனுவை அனுமதிக்கத்தக்க போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவினை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. **முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**

– இல்லை –

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.